Department of Education

GOVERNMENT OF WESTERN AUSTRALIA

# 11 மற்றும் 12 வயதினருக்கான தெரிவுகளை உருவாக்குதல்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

மாணவர்களுக்கு பல்கலைக்கழகப் படிப்பில் ஆர்வமிருக்கலாம்; மேற்கொண்டு கல்வியும் பயிற்சியும் உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத்தொழிலை மனதில்கொண்டிருக்கலாம் அல்லது பள்ளியை விட்டுச் சென்றதும் வேலைக்குச் செல்லும் நோக்கில் இருக்கலாம். 11 மற்றும் 12 ஆம் ஆண்டுகளில் உள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழகம், பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்குச் செல்லும் பல்வேறு வழிகளை வழங்கக்கூடிய பலவகையான தெரிவுகள் உள்ளன.

### 11 மற்றும் 12ஆம் ஆண்டு மாணவர்களுக்கான பாடப்பிரிவுகளும் திட்டங்களும்.

| தெரிவுகள் | விளக்கம் |
|---|---|
| **ATAR பாடப்பிரிவுகள்** | ஆஸ்திரேலிய மூன்றாம்நிலை சேர்க்கைகள் தரமதிப்பு (ATAR) பாடப்பிரிவுகள் பொதுவாக கல்விசார் கவனத்தைக் கொண்டுள்ளது. ATAR அடைய விரும்பும் மாணவர்கள் குறைந்தது நான்கு ஆண்டு 12 ATAR பாடப்பிரிவுகளை நிறைவுசெய்ய வேண்டும். வழக்கமாக பல்கலைக்கழகப் படிப்புகளுக்கு இது எடுக்கப்படுகிறது என்றாலும், ATAR பாடப்பிரிவுகளும் பள்ளிக்குப் பிறகான பல்வகை வழிகளுக்கு தொழிற்பயிற்சி உட்பட சிறப்பாகத் தயார்படுத்துகிறது. |

CC BY
Exclusions may apply

| | |
|---|---|
| **பொது வான பாடப்பி ரிவுகள்** | இந்தப் பாடப்பிரிவுகள் பொதுவாக மேற்கொண்டு தொழிற்பயிற்சியை நோக்கமாகக் கொண்ட அல்லது பள்ளியை முடித்ததும் வேலையில் சேர எண்ணும் மாணவர்களை முதன்மை இலக்காகக் கொண்டவை.<br>பொதுவான பாடப்பிரிவுகளில் ATAR பாடப்பிரிவுகளில் உள்ளது போல புறநிலையில் தேர்வுகளை நடத்தப்படாது. ஆனால் 12ஆம் ஆண்டில் புறநிலையில் அமைக்கப்பட்ட கட்டாய வேலை உண்டு. இது மாணவரின் ஒட்டுமொத்த மதிப்பீட்டில் 15 சதவீதத்தை வகிக்கும். மாணவர்கள் சில பொதுவான பாடப்பிரிவுகளை சில பல்கலைக்கழகப் பாடப்பிரிவுகளில் நுழைவதற்கான மாற்றுவழியின் பகுதியாகவும் பயன்படுத்தலாம். |
| **அடிப்படைப் பாடப்பிரிவுகள்** | 12ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக எழுத்தறிவு மற்றும்/அல்லது எண்ணறிவுக்கான குறைந்தபட்ச தரநிலைகளை எட்டுவதற்கு உதவி தேவைப்படும் மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தப் பாடப்பிரிவுகள் அடிப்படை எண், எழுத்து திறமைகள், நடைமுறை வேலைகளில் கவனம் செலுத்துகிறது-வாழ்க்கைக்கும் வேலைக்கும் முக்கியமாக உள்ள தொடர்புடைய அனுபவம் மற்றும் தனிப்பட்ட திறமைகளை உருவாக்கும் வாய்ப்பு.<br>அடிப்படைப் பாடப்பிரிவுகளில் தேர்வுகள் இருக்காது. 12ஆம் ஆண்டில் கட்டாய புறநிலையில் அமைக்கப்பட்ட வேலை இருக்கும். இது மாணவரின் அந்தப் பாடப்பிரிவுக்கான பள்ளி அடிப்படையிலான மதிப்பீட்டில் 15 சதவீதமாக இருக்கும். |
| **VET தகுதிகள்** | மாணவர்கள் தேசிய அங்கீகாரம் பெற்ற தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) கல்வித்தகுதியை நிறைவுசெய்ய வேண்டும். VET பணியிடத்துக்கான திறமைகளையும் அறிவையும் கட்டமைக்கிறது. மேற்கு ஆஸ்திரேலிய கல்விச்சான்றிதழ் (WACE) பெறுவதற்கு மாணவர்கள் VET கல்வித்தகுதிகளைப் பயன்படுத்தலாம். |



CC BY
Exclusions may apply

| | |
|---|---|
| **அங்கீகாரம் பெற்ற திட்டங்கள்** | அங்கீகாரம் பெற்ற திட்டங்கள் என்பவை WACE பாடப்பிரிவுகளிலோ அல்லது VET திட்டங்களிலோ உள்ளடங்கியிராத செயல்பாடுகள் வழியாகக் கற்றலை வழங்குகின்றன. அங்கீகாரம் பெற்ற திட்டங்கள் என்பவை பள்ளிகள், பணியிடங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களால் அமைக்கப்படும் பல்வேறு அமைப்புகள் வழங்கும் திட்டங்களில் பங்கேற்க விரும்பும் மாணவர்களுக்கானவை. அங்கீகாரம் பெற்ற திட்டங்கள் பள்ளிப் பாடத்திட்டம் அல்லது பாடத்திட்டம் தாண்டிய செயல்பாடுகளின் பகுதியாக வழங்கப்படுகின்றன. மாணவர்கள் WACE-க்காக இவற்றைப் பயன்படுத்த முடியும். |
| **தொடக்கநிலைப் பாடப்பிரிவுகள்** | கற்றல் சிரமம் மற்றும்/அல்லது அறிவாற்றல் குறைபாடு கண்டறியப்பட்ட மாணவர்களுக்காகத் தொடக்கநிலைப் பாடப்பிரிவுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடப்பிரிவுகள் ATAR, பொது அல்லது அடிப்படைப் பாடப்பிரிவினை சரிக்கட்டலுடன் மற்றும்/அல்லது மாற்றுத்திறன் உதவிகளுடன் அணுகமுடியாத மாணவர்களுக்குத் தெரிவுகளை வழங்குகின்றன.<br>தொடக்கநிலைப் பாடங்கள் WACE-ஐஅடைவதற்கு பங்களிப்பதில்லை. |


D23/0255360
February 2023
Exclusions may apply